**செய்தி வெளியீடு எண்: 387** **நாள்: 18.06.2018**

## செய்தி வெளியீடு

6வது முதல் 10வது வகுப்புவரை பயிலும் இளம் மாணவர்களில், அறிவியல் ஆர்வம் உள்ள மாணவர்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்தும் திட்டமே INSPIRE விருதுத் திட்டமாகும் (INSPIRE AWARD MANAK SCHEME). இத்தகு மாணவர்கள், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதும், ரூ.10,000/– பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது. இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள், மாவட்ட அளவில் நடைபெறும் அறிவியல் கண்காட்சிப் போட்டிகளில் கலந்து கொள்வர். பின்னர் மாநில அளவிலும், தேசிய அளவிலும் போட்டிகள் நடைபெறும். மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை, இச்செயல்பாடுகளுக்கான செலவுகளை ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழகத்தில், புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுப்பணிகளை நிறைவேற்றி வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டிற்கு 2444 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட 232 மாணவர்கள், 2018 ஜூன் 20-21 ஆகிய நாட்களில், காஞ்சிபுரம் **ஆனந்த் உயர்தொழில்நுட்பக்கழகம், கலசலிங்கம் நகர், ராஜீவ்காந்தி சாலை, களிபட்டூர், சென்னை – 603 103**, நிறுவன வளாகத்தில் மாநில அளவிலான கண்காட்சியில் கலந்து கொள்கின்றனர். இதில் 23 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதுதில்லியில் (2018 டிசம்பர்) நடைபெறவுள்ள தேசிய அளவிலான புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுக்கான போட்டிகளில் கலந்து கொள்வர்.

இந்தக் கண்காட்சி, **மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. K.P. அன்பழகன்** அவர்களால், **2018 ஜூன் 20** ஆம் நாள் **காலை 08.30** மணியளவில் **ஆனந்த் உயர்தொழில்நுட்பக்கழக வளாகத்தில் தொடங்கி** வைக்கப்படவுள்ளது. உயர் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் **திரு.சுனில் பாலிவால், இ.ஆ.ப** அவர்கள் முதன்மையுரை ஆற்றவுள்ளார்கள். பள்ளிக்கல்வி துறை இயக்குனர் **முனைவர் R.இளங்கோவன்** அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுவார்கள்.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. P. பொன்னையா, இ.ஆ.ப** அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்கள். ஆனந்த் உயர்தொழில்நுட்பக்கழகத்தின் தலைவர் சேவரத்னா, **முனைவர் K. ஸ்ரீதர்,** அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்கிறார். **மாண்புமிகு காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினர், திருமதி. மரகதம் குமரவேல்,** அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். **முனைவர்.ச.சௌந்தரராஜப்பெருமாள்,** செயல் இயக்குநர் (பொ), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், **டாக்டர். S. அறிவழகி,** செயலர், ஆனந்த் உயர்தொழில்நுட்பக்கழகம், **திருமதி. திருவளர்செல்வி**, காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், **திரு. எஸ்.என். மனோகரன்,** சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோர் பங்கேற்பர்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு, செய்தியாளர்களை காஞ்சிபுரம் **ஆனந்த் உயர்தொழில்நுட்பக்கழகம், கலசலிங்கம் நகர், ராஜீவ்காந்தி சாலை, களிபட்டூர், சென்னை – 603 103**, நிறுவனத்திற்கு ஜூன் **20** ஆம் நாள் காலை 08.30 மணிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**